14

## கருக்கம்

வேளாண்மை – பரமக்குடி, காரைக்குடி மற்றும் தக்கலையில் உள்ள மூன்று விதைச்சான்று அலுவலர் பணியிடங்கள் – பணிப்பெயர்ச்சி மூலம் தாராபுரம், திருப்பூர் மாவட்டத்திற்கு மாறுதல் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

அ.ஆ.(நிலை)எண்.274 நாள்:30.11.2012

படிக்க

1. அ.ஆ(நிலை)எண்.537வேளாண்மை(வேநி8)த்துறை நாள்.24.12.07
2. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் கடித நாள்.அ1/29791/10 நாள்.09.09.2010, 03.03.2011, 21.11.2011, 09.07.2012

----

ஆணை:

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் படி வேளாண்மைத்துறை மறுச்சீரமைப்பின் கீழ் விதைச்சான்றுத்துறையில் விதைச்சான்று அலுவலர்கள், பணியிட தலைமையிடம் மற்றும் ஆளுகை எல்லை நிர்ணயிக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. இதனைத்தொடர்ந்து பார்வையிரண்டில் படிக்கப்பட்ட விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் தனது கருத்துருவில் தற்போது திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்தில் விதைச்சான்று பணிகள் கடந்த காலங்களைக் காட்டிலும் அதிக அளவில் நடைபெற்று வருகிறது என்றும், தாராபுரம் வட்டத்தில் மட்டுமே 35 விதைச்சுத்திகரிப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், அரசு விதைச்சுத்திகரிப்பு நிலையம் 2 எண்கள் மட்டும் செயல்பட்டு வருகின்றன என்றும், மேற்படி, அரசு சுத்திகரிப்பு நிலையங்களில் மட்டும் ஆண்டுதோறும் நெல், பயறுவகை மற்றும் எண்ணெய்வித்து வகைகள் 40,000 மெ.டன் அளவு சுத்திகரிப்பு செய்து வழங்கப்படுகிறது என்றும், மேலும், சுமார் 3,000 எக்டரில் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்கள் விதைச்சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டு வயலாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், தாராபுரம் வட்டத்தில் உரிய காலகட்டத்தில் வயலாய்வு, அறுவடை, பின் நேர்த்தி, சுத்திப்பணிகள்,மாதிரி எடுத்தல், சான்றட்டை கட்டுதல் மற்றும் தரமான விதை விநியோகம் ஆகிய பணிகள் பெருமளவில் நடைபெற்று வருவதால் தாராபுரம் வட்டார பகுதிக்கு கூடுதலாக 3 விதைச்சான்று அலுவலர் பணியிடங்களை தோற்றுவிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். மேலும், தரமான விதை உற்பத்தி பணியில் ஈடுபட்டுள்ள விதை உற்பத்தியாளர்களது கோரிக்கைகளை ஏற்று, சான்றுப் பணிகளில் தேக்கம் ஏற்படாவண்ணம் கூடுதல் விதைச்சான்று அலுவலர் பணியிடங்களை தோற்றுவிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது என்றும் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் இராமநாதபுரம், சிவகங்கை, கன்னியாகுமரி மாவட்டங்களில், மாவட்டம் வாரியாக இரண்டு விதைச்சான்று அலுவலர் பணியிடங்கள் உள்ளன என்றும், இவற்றில் பணிப்பளு குறைவாக உள்ள பரமக்குடி, காரைக்குடி மற்றும் தக்கலை விதைச்சான்று அலுவலர்களின் பணியிடங்களை விதைச்சான்று உதவி இயக்குநர், ஈரோடு அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் வரும் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டாரத்தில் தாராபுரம் 4,5,6 என்ற மூன்று புதிய தலைமையிடங்களை உருவாக்கி அத்தலைமையிடங்களுக்கு மாற்றுவதற்கு அரசின் அனுமதி கோரியுள்ளார். மேலும் பணிப்பெயர்ச்சி செய்யப்படவுள்ள விதைச்சான்று அலுவலர் பதவிகளின் ஊதிய விகிதங்களும், புதிதாக தோற்றுவிக்கப்படவுள்ள விதைச்சான்று அலுவலர்

பதவியின் ஊதிய விகிதங்களும் ஒரே மாதிரியாக ரூ.9300–34800+ரூ.4700 தனி ஊதியம், என வித்தியாசமின்றி இருப்பதால் இப்பணிப்பெயர்ச்சி நிகழ்வுகளால் அரசிற்கு எவ்விதத்திலும் கூடுதல் நிதிச்செலவினங்கள் ஏதுமில்லை, என்றும் எனவே, பணிப்பெயர்ச்சி மூலமாக விதைச்சான்று உதவி இயக்குநர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகியோரின் கட்டுப்பாட்டில் பணிப்பளு குறைவாக உள்ள பரமக்குடி, காரைக்குடி மற்றும் தக்கலை விதைச்சான்று அலுவலர்களின் பணியிடங்களை தாராபுரம் பகுதிக்கு பணிப்பெயர்ச்சி மூலம் மாறுதல் செய்து ஆணை வழங்கும்படி கோரியுள்ளார்.

2. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று விதைச்சான்று உதவி இயக்குநர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகியோரின் கட்டுப்பாட்டில் உள்ள பரமக்குடி, காரைக்குடி, தக்கலை பகுதிகளில் பணிப்பளுக்குறைவாக உள்ள மூன்றுவிதைச்சான்று அலுவலர் பணியிடங்களை, பணிப்பெயர்ச்சி மூலம், திருப்பூர் மாவட்டம் தாராபுரம் வட்டத்திற்கு கூடுதலாக மாறுதல் செய்து அரசு ஆணையிடுகிறது.

3. தற்போது விதைச்சான்றுத்துறை இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள விதைச்சான்று அலுவலர்கள்தலைமையிடம் மற்றும் ஆளுகை எல்லைகள் (மற்றும்) பணிப்பெயர்ச்சி மூலமாக ஏற்படும் ஆளுகை எல்லை மாற்றம் தொடர்பான விவரங்கள் இணைப்பு I-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிப்பெயர்ச்சி மூலமாக ஒப்பளிக்கப்பட உள்ள பணியிடங்கள் குறித்த விபரங்கள் இணைப்பு II-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை மற்றும் நிதித்துறைகளின் அ.சா.கு.எண்.44331/டி/2012–1, நாள்.16.11.2012 மற்றும் அ.சா.கு.எண்.65191/நிதி (வேளாண்மை)/2012 நாள்.27.11.2012–ன்டி, அத்துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயளாலர்

பெறுதல்
விதைச்சான்று (ம) அங்ககச்சான்று இயக்குநர், கோயமுத்தூர்–13
மாநிலக் கணக்காயர்,சென்னை–35/பெ
மாநிலக் கணக்காயர், சென்னை–18/பெ
கருவூல அலுவலர், கோயமுத்தூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி, சிவகங்கை மாவட்டங்கள்
<u>நகல்</u>
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
வேளாண்மை உற்பத்தி ஆணையர்(ம)அரசு செயலரின் தனிச்செயலர்,சென்னை–9
நிதித்துறை, சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை–9
இருப்பு கோப்பு /உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/12/12
பிரிவு அலுவலர்
5/12/12

# இணைப்பு I

## விதைச்சான்று அலுவலர் தலைமையிடம் மற்றும் பணிப்பெயர்ச்சி மூலமாக ஏற்படும் ஆளுகை எல்லை மாற்ற விவரங்கள்

| தற்பொழுது விதைச்சான்று உதவி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள விதைச்சான்று அலுவலர்களின் தலைமையிடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளுகை எல்லைகள் | | | | விதைச்சான்று அலுவலர்களின் பணியிடம் பணிப்பெயர்ச்சி செய்யப்படுவதால் உருவாகும் தலைமையிடம் மற்றும் ஆளுகை எல்லைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண். | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் தாலுக்கா | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) |
| 1 | இராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குநர் பகுதி | | | விதைச்சான்று அலுவலர், இராமநாதபுரம் | | |
| | விதைச்சான்று அலுவலர்,இராமநாதபுரம் | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | | இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| | | திருப்புல்லாணி | | | திருப்புல்லாணி | |
| | | மண்டபம் | | | மண்டபம் | |
| | | திருவாடானை | திருவாடானை | | திருவாடானை | திருவாடானை |
| | | ஆர்.எஸ்.மங்கலம் | | | ஆர்.எஸ்.மங்கலம் | |
| 2 | விதைச்சான்று அலுவலர், பரமக்குடி | பரமக்குடி | பரமக்குடி | | பரமக்குடி | பரமக்குடி |
| | | நையினார் கோவில் | | | நயினார் கோவில் | |
| | | போகளூர் | | | போகளூர் | |
| | | முதுகொளத்தூர் | முதுகொளத்தூர் | | முதுகொளத்தூர் | முதுகொளத்தூர் |
| | | கடலடி | கடலடி | | கடலடி | கடலடி |
| | | கமுதி | கமுதி | | கமுதி | கமுதி |
| | **சிவகங்கை விதைச்சான்று உதவி இயக்குநர் பகுதி** | | | | | |
| 1 | விதைச்சான்று அலுவலர், சிவகங்கை | சாக்கோட்டை | சிவகங்கை | விதைச்சான்று அலுவலர், சிவகங்கை | சாக்கோட்டை | சிவகங்கை |
| | | காளையார் கோவில் | மானாமதுரை | | காளையார் கோவில் | மானாமதுரை |
| | | மானாமதுரை | | | மானாமதுரை | |
| | | திருப்புவனம் | இளையான்குடி | | திருப்புவனம் | இளையான்குடி |
| | | இளையான்குடி | | | இளையான்குடி | |

## இணைப்பு I (தொடர்ச்சி.........)

**விதைச்சான்று அலுவலர் தலைமையிடம் மற்றும் பணிப்பெயர்ச்சி மூலமாக ஏற்படும் ஆளுகை எல்லை மாற்ற விவரங்கள்**

| தற்பொழுது விதைச்சான்று உதவி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள விதைச்சான்று அலுவலர்களின் தலைமையிடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளுகை எல்லைகள் | | | | விதைச்சான்று அலுவலர்களின் பணியிடம் பணிப்பெயர்ச்சி செய்யப்படுவதால் உருவாகும் தலைமையிடம் மற்றும் ஆளுகை எல்லைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண். | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) |
| 2 | விதைச்சான்று அலுவலர்,காரைக்குடி | சாக்கோட்டை | காரைக்குடி | விதைச்சான்று அலுவலர், சிவகங்கை | சாக்கோட்டை | காரைக்குடி |
| | | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | | திருப்பத்தூர் | திருப்பத்தூர் |
| | | சிங்கம்புனரி | | | சிங்கம்புனரி | |
| | | எஸ்.புதூர் | | | எஸ்.புதூர் | |
| | | கல்லால் | காரைக்குடி | | கல்லால் | காரைக்குடி |
| | | தேவகோட்டை | தேவகோட்டை | | தேவகோட்டை | தேவகோட்டை |
| | | கண்ணன்குடி | | | கண்ணன்குடி | |
| | கன்னியாகுமரி விதைச்சான்று உதவி இயக்குநர் பகுதி | | | | | |
| 1 | விதைச்சான்று அலுவலர், நாகர்கோவில் | அகஸ்தீஸ்வரம் | அகஸ்தீஸ்வரம் | விதைச்சான்று அலுவலர், நாகர்கோவில் | அகஸ்தீஸ்வரம் | அகஸ்தீஸ்வரம் |
| | | தோவாலை | பூதப்பாண்டி | | தோவாலை | பூதப்பாண்டி |
| | | ராஜாக்கமங்கலம் | அகஸ்தீஸ்வரம் | | ராஜாக்கமங்கலம் | அகஸ்தீஸ்வரம் |
| | | திருவட்டார் | கள்ளிகுளம் | | திருவட்டார் | கள்ளிகுளம் |
| 2 | விதைச்சான்று அலுவலர், தக்கலை | தக்கலை | கள்ளிகுளம் | | தக்கலை | கள்ளிகுளம் |
| | | குறுந்தங்கோடு | | | குறுந்தங்கோடு | |
| | | கிள்ளியூர் | விலவங்கோடு | | கிள்ளியூர் | விலவங்கோடு |
| | | முஞ்சிறை | | | முஞ்சிறை | |
| | | குளித்துறை | | | குளித்துறை | |

## இணைப்பு I (தொடர்ச்சி.........)

**விதைச்சான்று அலுவலர் தலைமையிடம் மற்றும் பணிப்பெயர்ச்சி மூலமாக ஏற்படும் ஆளுகை எல்லை மாற்ற விவரங்கள்**

| தற்பொழுது விதைச்சான்று உதவி இயக்குநர் ஈரோடு அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள விதைச்சான்று அலுவலர்களின் தலைமையிடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளுகை எல்லைகள் | | | | விதைச்சான்று அலுவலர்களின் பணியிடம் தாராபுரம் வட்டத்திற்கு கூடுதலாக பணிப்பெயர்ச்சி செய்யப்படுவதால் உருவாகும் தலைமையிடம்மற்றும் ஆளுகை எல்லைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண். | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) |
| 1 | விதைச்சான்று அலுவலர், ஈரோடு | ஈரோடு | ஈரோடு | விதைச்சான்று அலுவலர், ஈரோடு | ஈரோடு | ஈரோடு |
| | | மொடக்குறிச்சி | | | மொடக்குறிச்சி | |
| | | கொடுமுடி | | | கொடுமுடி | |
| 2 | பெருந்துறை | பெருந்துறை | பெருந்துறை | பெருந்துறை | பெருந்துறை | பெருந்துறை |
| | | சென்னிமலை | | | சென்னிமலை | |
| | | ஊத்துக்குளி | | | ஊத்துக்குளி | |
| 3 | பவானி | பவானி | பவானி | பவானி | பவானி | பவானி |
| 4 | அம்மாபேட்டை | அம்மாபேட்டை | பவானி | அம்மாபேட்டை | அம்மாபேட்டை | பவானி |
| 5 | காங்கேயம் | காங்கேயம் | காங்கேயம் | காங்கேயம் | காங்கேயம் | காங்கேயம் |
| | | வெள்ளகோயில் | | | வெள்ளகோயில் | |
| 6 | கோபி1 | ட்டி.என்.பாளையம் | கோபி | கோபி | ட்டி.என்.பாளையம் | கோபி |
| | | நம்பியூர் | | | நம்பியூர் | |
| 7 | கோபி2 | கோபி | கோபி | கோபி2 | கோபி | கோபி |
| | | அந்தியூர் | பவானி | | அந்தியூர் | பவானி |

## இணைப்பு I (தொடர்ச்சி .........)

**விதைச்சான்று அலுவலர் தலைமையிடம் மற்றும் பணிப்பெயர்ச்சி மூலமாக ஏற்படும் ஆளுகை எல்லை மாற்ற விவரங்கள்**

| | தற்பொழுது விதைச்சான்று உதவி இயக்குநர் ஈரோடு அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள விதைச்சான்று அலுவலர்களின் தலைமையிடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆளுகை எல்லைகள் | | | விதைச்சான்று அலுவலர்களின் பணியிடம் பணிப்பெயர்ச்சி செய்யப்படுவதால் உருவாகும் தலைமையிடம் மற்றும் ஆளுகை எல்லைகள் | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண். | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) | தலைமையிடம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை | வட்டம் (தாலுக்கா) |
| 8 | சத்தியமங்கலம் | சக்தி | சக்தி | சத்தியமங்கலம் | சக்தி | சக்தி |
| | | தாளவாடி | | | தாளவாடி | |
| 9 | பவானிசாகர் | பவானிசாகர் | சக்தி | பவானிசாகர் | பவானிசாகர் | சக்தி |
| 10 | தாராபுரம் 1 | தாராபுரம் | தாராபுரம் | தாராபுரம் 1 | தாராபுரம் | தாராபுரம் |
| 11 | தாராபுரம் 2 | தாராபுரம் | தாராபுரம் | தாராபுரம்2 | தாராபுரம் | தாராபுரம் |
| 12 | தாராபுரம் 3 | தாராபுரம் | தாராபுரம் | தாராபுரம்3 | தாராபுரம் | தாராபுரம் |
| | குண்டடம் | குண்டடம் | | தாராபுரம்4 | தாராபுரம் | தாராபுரம் |
| | மூலனூர் | மூலனூர் | | தாராபுரம்5 | தாராபுரம் | தாராபுரம் |
| | | | | தாராபுரம்6 | தாராபுரம் | தாராபுரம் |
| 13 | குண்டடம் | குண்டடம் | தாராபுரம் | குண்டடம் | குண்டடம் | தாராபுரம் |
| 14 | மூலனூர் | மூலனூர் | தாராபுரம் | மூலனூர் | மூலனூர் | தாராபுரம் |
| 15 | விதைச்சான்று அலுவலர், (தொ.நு) | மாவட்டம் முழுவதும் | மாவட்டம் முழுவதும் | விதைச்சான்று அலுவலர்,(தொ.நு) | மாவட்டம் முழுவதும் | மாவட்டம் முழுவதும் |

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு செயலாளர்

//உண்மைநகல்//

பிரிவு அலுவலர்
05/12/12

## இணைப்பு II

### பணிப்பெயர்ச்சி மூலமாக ஒப்பளிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் விபரங்கள்

| வ. எண் | பணிப்பெயர்ச்சி செய்யப்படும் பதவியின் பெயர் அலுவலகம் மற்றும் ஊதிய விகிதம் | பணிப் பெயர்ச்சி செய்யப்படும் பணியிடம் தற்காலிகப் பணியிடமா / நிரந்தரப் பணியிடமா | பணிப் பெயர்ச்சி செய்யப்படும் பதவியின் எண்ணிக்கை | பணியிடம் ஒப்பளிக்கப் பட்ட அரசாணை எண் மற்றும் நாள் | தற்காலிகப் பணியிடமெனில் பணியிடம் கடைசியாகத் தொடர அரசால் வழங்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் | கணக்குத்தலைப்பு | பணிப்பெயர்ச்சி மூலமாக புதியதாக ஒப்பளிக்க வேண்டிய பதவியின் பெயர் அலுவலகம் மற்றும் ஊதிய விகிதம் | புதிதாக ஒப்பளிக்கப் படும் பதவியின் எண்ணிக்கை | கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | விதைச்சான்று அலுவலர், பரமக்குடி விதைச்சான்று உதவிஇயக்குநர் அலுவலகம் இராமநாதபுரம், ரூ.9300+34800+ ரூ.4700 தர ஊதியம் | நிரந்தரம் | 1 | அரசாணை எண்.1042/ வேளாண்மைத் துறை, நாள்.4.6.85 | – | 2435 Other Agricultural Programmes(01) Marketing and quality control (102) Grading and Quality control facilities (1) Non Plan (AF)Seed Certification | – | 1 | 2435 Other Agricultural Programmes(01) Marketing and quality control (102) Grading and Quality control facilities (1) Non Plan (AF)Seed Certification |
| .2 | விதைச்சான்று அலுவலர், காரைக்குடி விதைச்சான்று உதவிஇயக்குநர் அலுவலகம் இராமநாதபுரம், ரூ.9300+34800+ ரூ.4700 தர ஊதியம் | நிரந்தரம் | 1 | அரசாணை எண்.1865/ வேளாண்மைத் துறை, நாள்.18.9.80 | – | | – | 1 | |

இணைப்பு –II ,,,,,,,,(தொடர்ச்சி)

| வ. எண் | பணிப்பெயர்ச்சி செய்யப்படும் பதவியின் பெயர் அலுவலகம் மற்றும் ஊதிய விகிதம் | பணிப் பெயர்ச்சி செய்யப்படும் பணியிடம் தற்காலிகப் பணியிடமா / நிரந்தரப் பணியிடமா | பணிப் பெயர்ச்சி செய்யப்படும் பதவியின் எண்ணிக்கை | பணியிடம் ஒப்பளிக்கப் பட்ட அரசாணை எண் மற்றும் நாள் | தற்காலிகப் பணியிடமெனில் பணியிடம் கடைசியாகத் தொடர அரசால் வழங்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் | கணக்குத்தலைப்பு | பணிப்பெயர்ச்சி மூலமாக புதியதாக ஒப்பளிக்க வேண்டிய பதவியின் பெயர் அலுவலகம் மற்றும் ஊதிய விகிதம் | புதிதாக ஒப்பளிக்கப் படும் பதவியின் எண்ணிக்கை | கணக்குத் தலைப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | விதைச்சான்று அலுவலர், காரைக்குடி விதைச்சான்று உதவியக்குநர் அலுவலகம் கன்னியாகுமரி ரூ.9300-34800+ ரூ.4700 தர ஊதியம் | தற்காலிகம் | 1 | அரசாணை எண்.537/ வேளாண்மைத் (வேநி8)துறை, நாள்.24.12.2007 | அரசாணை எண். (3டி) எண்.204/ வேளாண்மைத் (வேநி1)துறை, நாள்.16.12.2009 | 2435 Other Agricultural Programmes(01) Marketing and quality control (102) Grading and Quality control facilities (1) Non Plan (AF)Seed Certification | - | 1 | 2435 Other Agricultural Programmes(01) Marketing and quality control (102) Grading and Quality control facilities (1) Non Plan (AF)Seed Certification |

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு செயலாளர்

//உண்மைநகல்//

(ஒ.) 5/12/12
பிரிவு அலுவலர்
5/12/12